செ.வெ.எண்:16 நாள்: 05.08.2017

**தாமிரபரணி துாய்மைபடுத்தும் பணி -2017ன் படி மீண்டும் பணிமேற்கொள்வது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆடசித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி இ.ஆ.ப, அவர்கள் தலைமையில் நடைபெற்றது**

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அவர்களின் பெரும் முயற்சியின் காரணமாக தாமிரபரணி ஆறு சுத்தம் செய்யும் பணி 16.07.2017 அன்று சிறப்பாக செயல்படுத்தப்பட்டது. அதனை தொடர்ந்து அடுத்தகட்டமாக சுத்தம் செய்யும் பணிகள் மேற்கொள்வது தொடர்பாகவும், ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட பணிகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி இ.ஆ.ப, அவர்கள் தலைமையில் இன்று (5.08.2017) மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சந்தீப் நந்தூரி இ.ஆ.ப, அவர்கள் தெரிவித்ததாவது.

தாமிரபரணி துாய்மைப்படுத்தும்பணி-2017ன் படி முதற்கட்டமாக கருப்பந்துறை முதல் வடக்கு பைபாஸ் பாலம் வரை 4.85 கி.மி துாரத்திற்கு ஆற்றின் இரண்டு கரைபகுதியிலும் மொத்தம் சுமார் 10 கி.மீட்டர் துாரத்திற்கு துாய்மை பணிகள் மேற்க்கொள்ளப்பட்டது. இதில் 20 கல்லூரிகளைச் சேர்ந்த 1500 மாணவ மாணவியர்கள், மற்றும் 500 தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள், மாநகராட்சி துப்புறவு பணியாளர்கள், அலுவலர்கள், பொதுமக்கள் உட்பட 2000த்திற்கும் மேற்ப்பட்டோர் ஈடுப்பட்டனர். சுமார் 7டன் குப்பைகள் சேகரிக்கப்பட்டு வெளியேற்றப்பட்டுள்ளது.

திருநெல்வேலி மாவட்டத்தில் தாமிரபரணி ஆறு சுத்தம் செய்யும் பணியில் ஈடுபட்டு பெருமை சேர்த்த மாணவர்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், வருவாய்துறை அலுவலர்கள் சங்கம், ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்கள் சங்கம், தாமிரபரணி ஆறு சுத்தம் செய்யும் அமைப்பினர், ஆசிரியர்கள், மாநகராட்சி பணியாளர்கள், அரசு அலுவலர்கள், மற்றும் இப்பணிகளை ஒருங்கினைத்த அண்ணா பல்கலைக்கழகத்தினர் ஆகிய அனைவருக்கும் நன்றினை தெரிவித்துக்கொள்கிறேன். அனைவரின் ஒத்துழைப்போடு இத்திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டுள்ளது. இப்பணி பொதுமக்களிடையே பெரும் எதிர்பார்ப்பினை ஏற்ப்படுத்தியுள்ளது. மேற்கொண்ட பணியின்போது குறைபாடுகள் காணப்பட்டால் அவற்றை நிவர்த்தி செய்வதோடு, மேலும், சிறப்பாக செயல்படுத்துவதற்கு தேவையான ஆலொசனைகள் குறித்து விவாதிக்கப்பட்டது. தற்போது சுத்தம் செய்யப்பட்ட இடங்களை தொடர்ந்து சுத்தமாக பாராமரிக்கத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ள ஆலோசிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்த கருத்துறைகள் சம்மந்தப்பட்ட அமைப்பினர்களிடமிருந்து கோறப்பட்டுள்ளது. குப்பைகளை தரம்பிரித்து எந்தந்த இடங்களில் எவ்வகையான குப்பைகள் அதிகம்

சேர்கின்றன என்பதை கண்டறிந்து, அவற்றை முறையாக அப்புறப்படுத்தவும், தேவைப்படும் இடங்களில் குப்பை தொட்டிகளை வைக்கவும் ஆலோசிக்கப்பட்டது. மேலும் தேவைப்படும் இடங்களில் கழிப்பிட வசதிகள் செய்துதர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அனைத்துத்தரப்பினரும் பங்கேற்க்கும் வகையில் சுத்தம் செய்யபடவுள்ள இடங்களை முன்கூட்டியே தெரிவிக்கும் வகையில் விளம்பரப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இப்பணிகளில் மாணவர்கள், பொதுமக்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்களை சேர்ந்தவர்கள் அனைவரும் ஈடுபடவேண்டும். ஒவ்வொருவரும் தாமிரபரணி ஆற்றினை தூய்மை செய்ததில் என்பங்கும் உண்டு என பெருமைபடும் வகையில் அமைய வேண்டும் என்றார். யார் வேண்டுமானாலும் முன்கூட்டியே தகவல் தெரிவித்து. இப்பணியில் தங்களது பங்களிப்பை அளிக்கலாம். எனவும் கேட்டுக்கொண்டார்.

இந்த கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.முத்துராமலிங்கம், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.பழனி, கோட்டாச்சியர் திருமதி.மைதிலி, அண்ணா பல்கலைக்கழக முதல்வர் திரு.சக்திநாதன் மற்றும் அலுவலர்கள மாணவ மாணவியர்கள் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.ராமசுப்பிரமணியன், 21கல்லூரி பிரதிநிதிகள் nss coordinator மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு:** செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி